# கொற்றவை வழிபாடு

38

**முனைவர் தி.ஹேமலதா**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை**
**வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)**
**ஈரோடு -12**

**ஆய்வு நோக்கம்**

பெண்ணின் பெருந்தக்க யாவுள என்பதை மெய்ப்பிக்க பழந்தமிழ் இலக்கியங்களில் கொற்றவை வழிபாட்டை மேற்கொண்ட நிலையை எடுத்தியம்புவதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச்சுருக்கம்

**கொற்றவை** என்பவள் பாலை நிலத்துக்குரிய தெய்வமாக தமிழ் இலக்கியம் குறிப்பிடுகிறது. பழந்தமிழர் தாய்த்தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம் கொற்றவை வழிபாட்டிற்கு உண்டு.கள்ளர்,மறவர்,வேட்டுவர் மற்றும் எயினர் (எயினர் என்பவர்கள் பாலை நில வேட்டுவர்கள்) கொற்றவையை வணங்கியதாகச் சங்ககாலத்துக்குப் பிற்பட்ட இலக்கியங்கள் காட்டுகின்றன. வேட்டுவர் பாலை நிலத்துக்குரிய பூர்வகுடி மக்களாக அறியப்பட்டாலும், அவர்கள் ஐவகை நிலங்களிலும் பரவி வாழ்ந்தனர். கொற்றவை மறவர்களுக்கு தொழிலில் வெற்றியைக் கொடுப்பவள் என இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

**முன்னுரை**

வளமையின் குறியீடாக பண்டைக் காலம் தொட்டு பெண் கருதப்பட்டதால் வழிபாட்டுக்குரிய வணங்குதற்குரிய பொருண்மையில் பெண்மை போற்றப்பட்டது. இலக்கண இலக்கியங்கள் பெண்ணின் மகத்துவத்தை பதிவு செய்தன. தாய் நாடெனவும் தாய் மொழியெனவும் நிலம் நதி கடல் மலை என இயற்கையின் வெளிப்பாடுகள் பெண்ணின் பெயரால் பெருமைப்படுத்தப்பட்டன. பெண்மையின் மாபெரும் படைப்பு தாய் என்னும் உறவுநிலையாகும். தாய் என்பவள் தெய்வத்திற்கு இணையான நிலையில் வைக்கப்பட்டு வணங்கப்பட்டாள். பெண் தெய்வங்களை வழிபடும் நிலை தாய்தெய்வ வழிபாடு என அழைக்கப்பட்டது. கன்னித் தன்மையோடு விளங்கிய நிலையில் கன்னித்தெய்வமாகவும் பெற்றெடுத்தவள் என்ற நிலையில் தாயாகவும் தாய் தெய்வமாகவும் வகைப்படுத்தப்பட்டு பெண்தெய்வங்களை வழிபடும் பண்பாட்டு மரபு தொடர்ந்தது. உயிரைப்படைக்கும் சக்தி பெண்களுக்குண்டு என்ற நிலையில் வளமையின் குறியீடாக வழிபடப்பட்ட பெண்மை வழிபாட்டுக்குரிய பெண் தெய்வமாக நிலைநிறுத்தப்பட்டது. பழந்தமிழர் தாய்த்தெய்வ வழிபாட்டில் மிக இன்றியமையாத இடம் கொற்றவை வழிபாட்டிற்கு உண்டு.

**தொல்காப்பியத்தில் கொற்றவை வழிபாடு**

“மாயோன் மேய காடுஉறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்”[1]

தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களுக்கான தெய்வங்களாக மாயோன் சேயோன் வேந்தன் வருணன் என ஆண் தெய்வங்கள் தலைமைத் தெய்வங்களாக விளங்கின. முல்லையும் குறிஞ்சியும் திரிந்து பாலையானபோது பாலைநிலத்திற்குரிய தாய்த்தெய்வமானாள் கொற்றவை. வழிபடு தெய்வமான கொற்றவையே இலக்கியங்களில் இடம்பெற்றாள்.

தொல்காப்பியர்; புறத்திணை வெட்சித்திணைப் பகுதியில் கொற்றவை நிலை என்ற துறையினில் மன்னனின் ஆணையின்படி ஆகோடற்குச் செல்லும் வெட்சி மறவர் தாய்த் தெய்வமாகிய கொற்றவையை வணங்கிச் செல்வதை

“மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே”[2]

பழஞ்சமுதாய வழிபாடாக தொல்காப்பியர் கொற்றவை வழிபாட்டைக் குறிப்பிடுகின்றார்.

**புறப்பொருள் வெண்பாமாலையில் கொற்றவை வழிபாடு**

புறப்பொருள் வெண்பாமாலையில் வெட்சிப் படலத்தில் கொற்றவை நிலை என்ற துறையில் கொற்றவை வழிபாடு கூறப்பட்டுள்ளது.

“ஒளியினீங்க வீரர் படையோள்
அழியினிங்கா அருளுரைத்தன்று”[3]

ஆனிரைகளைக் கவர்ந்து வருவதற்காகச் செல்லும் படை வீரர்கள் கொற்றவையின் இரக்கத்தினின்று நீங்காத அருட்சிறப்பை வியந்து கூறியது என்ற நிலையில் அமைக்கப்பட்டுள்ளது வஞ்சிப் படலத்தில் கொற்றவை. வஞ்சிப் படலத்திலும் கொற்றவை நிலை என்ற துறையில் கொற்றவையைப் பற்றிக் கூறுகின்றார் புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர்.

“நீடோளன் வென்றி கொள்கென நிறைமண்டை வலுனுயரிக்
கூடாரைப் புறங்காணும் கொற்றவை நிலையுரைத்தன்று[4]

வஞ்சி வேந்தனுக்கு வெற்றியருளுகின்ற கொற்றவையினது அருளுடைமையைப் பாராட்டியது கொற்றவை நிலை என்பது அவளது திருவருள் மாண்பினையே ஆகும்.

“அணங்குடை நோலை பொரி புழுக்கள் பிண்டி
நிணங்குடற் நெய்த்தோர் நிறைத்துக் - கணம் புகலக்
கையிரிய மண்டைக்கு கண்மோடி காவலற்கு
மெய்யிரியத் தான் முந்துறும்”[5]

எள்ளுருண்டை நெற்பொரி அவரை துவரை அவல் குடர் குருதி ஆகியவற்றால் நிறைவித்துத் தனது பூதத் திரள்கள் விரும்பித் தனது கையிலே இருத்திய மண்டையையும் பூதகணங்களையும் உடையவளாகக் கொற்றவையைப் படம் பிடித்துக் காட்டுகிறார் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர். இத்தகைய கொற்றவை அரசனுக்குப் பகை கெட்டோடும்படி தானே முற்பட எழுந்தருளும்

தன்மை உடையவள் என்று உணரலாம். போர் மறவரின் செயலைச் சிறப்பித்தோதாலும் கொற்றவை நிலை என்னும் துறை என்பதை,

"மைந்துடை ஆடவர் செய்தொழில் கூறலும்
அந்தமில் புலவர் அதுவென மொழிப"[6]

என்ற நூற்பாவினால் கூறுகிறார் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர். இவ்வாறு இலக்கண நூல்களாகிய தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் தாய்த் தெய்வமாகிய கொற்றவை பற்றிக் கூறுகின்றன.

**சங்க இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு**

சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ள சூர் அணங்கு முதலான இயற்கை இகந்த ஆற்றல்களிலிருந்தே பழந்தமிழ் மக்களின் தாய்த்தெய்வ வழிபாட்டின் தொடக்கத்தை பல்வகை நம்பிக்கைகள் மற்றும் வழிபாட்டுச் சடங்குகளாகப் பரிணாமம் பெற்றன.சங்க காலத்தில் கொற்றவை மலை காடு என்ற இரு நிலத் தெய்வமாக கருத்தப்பட்டாள் என்பதை

"விடர் முகை இடுக்கத்து விறல்கெழு சூலி "[7]
"கடவுளரின் நிலைஇ"[8]
"உருகெழு மரபின் அயிரை"[9]
"காணாமர் செல்வி"[10]
"பெருங் காட்டு கொற்றி"[11]

சங்கஇலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன.

**பதிற்றுப்பத்தில் கொற்றவை வழிபாடு**

"நிறம்படு குருதி புறம்படின் அல்லது
மடைஎதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇஇ
கேடு இலவாகஇ பெரும! நின் புகழே!"[12]

பதிற்றுப்பத்தின் இம்மூன்று பாடல்களிலும் இடம்பெறும் அயிரை வழிபாட்டைக் கொற்றவை வழிபாடு என்றே தாய்வழிச் சமூகத்தின் வழிபடு தெய்வமான கொற்றவை வழிபடப்பட்டது என்று பொருள் கொள்ளப்படும்.

**திருமுருகாற்றுப்படையில் கொற்றவை வழிபாடு**

"மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே!
வெற்றி வெல்போர்க் கொற்றவைச் சிறுவ!
இழையணி சிறப்பின் பழையோள் குழவி!"[13]

திருமுருகாற்றுப்படையில் முருகன் யாருடைய மகன் என்பதனைக் குறிப்பிடும் போது நக்கீரர் குறிப்பிடும் பழையோள் பழந்தமிழர் தொல்குடிச் சமூகத் தாய்த்தெய்வமாகும். கொற்றவை வேட்டை

மற்றும் மேய்ச்சல் சமூகத் தாய்த்தெய்வமாகும். மலைமகள் நிலவுடைமைச் சமூக வைதீகக் கலப்புத் தாய்த் தெய்வமாகும்.

**பரிபாடலில் கொற்றவை வழிபாடு**

சிவனோடு கொற்றவையைத் தொடர்புபடுத்தும் அடையாளங்களும் இடம்பெற்றுள்ளன. பரிபாடலில் இடம்பெறும் அப்பகுதி பின்வருமாறு

“நெற்றி விழியா நிறைத்திலக மிட்டாளே
கொற்றவைக் கோலங் கொண்டோர் பெண்[14]”

இப்பாடலடிகளில் கொற்றவைக் கோலம் கொண்ட பெண் ஒருத்தி நெற்றிக்கண்ணாகத் திலகமிட்டுக்கொண்ட குறிப்பு இடம்பெற்றுள்ளது. சிவனின் நெற்றிக்கண் இங்கு கொற்றவைக்கு உரியதாய்க் காட்டப்பட்டுள்ளது.

“திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட்கு ஒன்று – மருவினிய
வையைஇரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்ய பரிபாடல் திறம்”[15]

பரிபாடல் இடம்பெறும் காடுகாட்கு ஒன்று என்ற செய்தி காடுகாள் -காடுகிழாள் ஆகிய கொற்றவை குறித்த பரிபாடல் பதிவுக்குத் தக்க சான்றாகும். திருமால் முருகன் குறித்த பாடல்களைக் கொண்ட பரிபாடலில் காடுகிழாளாகிய கொற்றவைக்கும் ஒருபாடல் இருந்ததாக குறிப்பிடப்படுகிறது.

**சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாடு**

“முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”[16] –

என்ற சிலப்பதிகார மேற்கோளின் அடிப்படையில் முல்லையும் குறிஞ்சியும் பாலையாகும். குறிஞ்சிக்கும் முல்லைக்கும் வழிபடு தெய்வமாயிருந்த தாய்த்தெய்வம் கொற்றவையே பாலை நிலத்துக்கும் வழிபடு தெய்வமாகிப் பின்னர் பாலைக்குரிய தெய்வம் கொற்றவை என்ற மரபு நிலை பெற்றது. கொற்றவை வழிபாடு பற்றிய விரிவான விளக்கங்கள் சிலப்பதிகாரத்து வேட்டுவ வரியுள்தான் முதன்முதலில் பதிவாகி உள்ளன. ஆறலைக் கள்வர்கள் என்று சுட்டப்படும் எயினர்கள் வணங்கும் கடவுளாகக் கொற்றவை வேட்டுவவரியில் சித்திரிக்கப் பெற்றுள்ளாள்.

முடிவுரை

இவ்வாறு காலந்தோறும் இலக்கியத்தில் கொற்றவை வழிபாடு பழக்கத்தில் இருந்ததைநாம் அறியலாம் அன்றைய வழிபாட்டு முறையினையும் மக்கள் இறைவன் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்பு**

1. *தொல். அகத். நூ. 5*
2. *தொல். புறத். 4*
3. *புறப்பொருள் வெண்பா மாலை*
4. *புறப்பொருள் வெண்பா மாலை*
5. *புறப்பொருள் வெண்பா மாலை*
6. *புறப்பொருள் வெண்பா மாலை*
7. *குறுந்தொகை 218*
8. *குறுந்தொகை*
9. பதிற்றுப்பத்து. 88
10. *அகநானூறு 345 (4-5)*
11. கலித். 89-8
12. பதிற்றுப்பத்து. 79
13. திரு.முரு. 257-259
14. பரிபாடல் 11 : 99-100
15. பரிபாடல்
16. சிலப்பதி. காடுகாண். 64-66

**துணைநூற்பட்டியல்**

1. கைலாசபதி, க.,
*பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்*,
குமரன் பப்ளிசர்ஸ், சென்னை. 1999.

2. நளினி, மு., கலைக்கோவன், இரா.,
*பெண்தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்*, டாக்டர். மா. இராசமாணிக்கனார் வரலாற்று மையம்.

3. நாராயணவேலுப்பிள்ளை, எம்.,
பத்துப்பாட்டு (முதல் பகுதி) தெளிவுரையுடன்,
முல்லை நிலையம், சென்னை. 2003.

4. சிறீ சந்திரன், ஜெ.,
*சிலப்பதிகாரம் மூலமும் தெளிவுரையும்*,
வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. 2001.